DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 28th day of April 2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **DW – 1** | கிராமம் | : | ஆலங்குளம் |
| பெயர் | : | ராஜகருங்கு | தாலுகா | : | கீழக்கரை |
| த/பெ. | : | ராமசாமி | சமயம் | : | இந்து |
| வயது | : | 30 | ஜாதி | : | -- |
| தொழில் | : | டிரைவர் | | | |

<u>நாள்: 28.04.2026</u>
<u>நேரம்: 12.00</u>

1ம் எதிரி ஆஜர் இல்லை, அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2ம் எதிரி ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 11.10.2022ம் தேதி நான் வேலைக்கு செல்வதற்காக எங்கள் ஊர் கண்மாய்க்கு குளிக்க சென்றேன். அப்போது எதிரிகள் இருவரும் பைக்கில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அ.சா.2 கர்ணபூபதி பைக்கில் சென்றவர்களை மறைத்து ஊரக்கெடுத்தவனே என்று சொல்லி கெட்ட வார்த்தையால் பேசினார். 2ம் எதிரி முகேஷ் ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டார். அ.சா.2.ன் கணவர் அ.சா.1 குமாரவேல் ஓடிவந்து, 2ம் எதிரியின் வாயில் குத்தினார். குத்தியதில் உதடு கிழிந்து கீழே விழுந்து கிடந்த 2ம் எதிரியை குமாரவேல் கையில் இருந்த மண்வெட்டி கணையால், 2ம் எதிரியின் நெஞ்சில் அடித்தார். அருகில் கூடியிருந்த ஆட்கள் சண்டையை விலக்கிவிட்டு, விக்னேஷ் என்பவரின் பைக்கில் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டனர். இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

எதிரிகள் இருவரும் எனது உறவுக்காரர்கள், நாங்கள் அண்ணன், தம்பி என்று பேசி கொள்வோம். நான் குளித்துவிட்டு வந்த பின்னர் சம்பவம் நடந்ததா, அல்லது குளிப்பதற்கு முன்பு நடந்ததா என்றால் குளிப்பதற்கு முன்னர் நடந்தது. சம்பவம் எங்கு நடந்தது என்றால் குமாரவேல் வீட்டிற்கு முன்பு ரோடு ஓரத்தில் நடந்தது. குமாரவேல் வீட்டு முன்பாக எதிரிகள் இருவரும், கர்ணபூபதியையும், குமாரவேலையும் அடித்து தாக்கினார்கள் என்றால் இல்லை. சம்பவம் எவ்வளவு நேரம், எந்த இடத்தில் நடந்தது என்றால் சுமார் கால்மணி நேரம், அ.சா.1ன் வீட்டின் முன்பாக உள்ள ரோட்டில் நடந்தது. 2ம் எதிரிக்கு காயம் ஏற்பட்டு, அவர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்களா என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சண்டை நடந்ததில் அ.சா.1க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் எதிரிகள் இருவருக்கும் உறவினர் என்பதால் அவர்கள் சொல்லி கொடுத்து, அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், நான் சம்பவத்தன்று குளிக்க செல்லவில்லை என்றாலும், நான் அன்றைய தினம் ஊரில் இல்லை என்றாலும் சரியல்ல. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்று 2ம் எதிரியை பார்த்தேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.04.28 12:19:21 +0530